கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்
சி.பி.எண்.51/2023

2026ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 09-ஆம் தேதியில் திரு.அன்பழகன் என்பவரின் மு.வி. வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும், தொழில் தகராறு சட்டம் 1947ன் படி) Bench Clerk (i/c) T. Sheik Asanar Mydeen ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 09.01.2026.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | அன்பழகன் |
| 2. | தந்தையார் பெயர் | : | ஏகாம்பரம் |
| 3. | தொழில் | : | |
| 4. | வயது | : | |
| 5. | முகவரி | : | |

**முதல் விசாரணை : -**

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை**

நாங்கள் வேலூர் தொழிலாளர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ரிட் மனு எண்.17918/2012 என்ற மனுவை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். தொழிலாளர் நீதிமன்றத்தில் மனுதாரருக்கு ரூபாய் 52,000 அளிக்க வேண்டும் என்று உத்தரவானது. நான் தவறாக கூறுகிறேன் என்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் மனுதாரருக்கு பணிதொடர்ச்சியுடன் வேலை மற்றும் பின்சம்பளம் ஆகியவற்றை வழங்கவேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். தொழிலாளர் நீதிமன்ற உத்தரவை உறுதி செய்து உயர்நீதிமன்றம் 29.09.2022 அன்று உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் 2022-ல் மூடப்பட்டது. தொழிலாளர் நீதிமன்ற உத்தரவு உறுதி செய்யப்பட்டதனால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியில் இருந்து நான் நிறுவனத்தை மூடிய காலம்

வரை மனுதாரருக்கு சம்பளம் மற்றும் இதர பணப்பயன்களை அளிக்கவேண்டும் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நான் மறுசீராய்வு மனு தாக்கல் செய்ததாக நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் ஆனால் அவ்வாறு மறுசீராய்வு மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தொழிலாளர் நீதிமன்ற உத்தரவுப்படிதான் பணப்பயன்களை கோருகிறார் என்றும் அதனை நான் வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 14:27:29 +0530